


**-காலம் மாறுது!**

எம்.ஜி.ஆரின் 93-ஆவது பிறந்த நாள் விழாவினை "இதயக்கனி' மாத இதழும், தமிழக எம்.ஜி.ஆர். மனிதநேய மன்றங்களும், கலை வேந்தன் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை பக்தர்களும் இணைந்து சென்னை காமராஜர் அரங்கில் கொண்டாடினர்.

பகலில் பல்வேறு நலத்திட்டப் பணிகள் நடைபெற்றன.

மாலை 5.30 முதல் "லக்ஷ்மன் ஸ்ருதி' குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆரின் கொள்கை, தத்துவப் பாடல்கள் இசைக்கப்பட்டன. டி.எம்.எஸ்.ஸின் புதல்வர் டி.எம்.எஸ். செல்வகுமார், டி.எஸ். பாலையாவின் புதல்வர் ஜே.பி., சீர்காழி சிவசிதம்பரம் ஆகியோர் பங்கேற்றுப் பாடினர்.

விழாவின் ஒரு பகுதியாக சீர்காழி கோவிந்தராஜனின் பவள விழாவினையொட்டி அவரது உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. தமிழக முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே படத்தைத் திறந்து வைக்க, விஜய டி. ராஜேந்தர் மாலை சூட்டினார். ராஜஸ்ரீ, பி.எஸ். சரோஜா, சிவகுமார், முத்துலிங்கம் ஆகியோருக்கு "ஏ.எஸ்.எஸ். விருது அளித்து கௌரவித்தார் ஜெயந்தி கண்ணப்பன்.

எம்.ஜி.ஆரின் அதிக படங்களுக்கு வசனமெழுதிய "முரசொலி சொர்ணம்' விழாவில் கௌரவிக்கப்பட்டார்.